பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

551

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAY 1954

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 திருதலம், [illegible]ம்பாக்கம் ; விசய, பங்குன; 9—4—54 தளிர்-25

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

மேலும் ஒரு செல்வம்

செல்வம் என்பது எல்லார்க்கும் தேவையாய் இருக்கின்றது; செல்வம் இருந்தால், வாழ்க்கையில் எல்லாம் உண்டு; மகிழ்ச்சியும் நிலவும். செல்வம் இல்லையானால் எல்லாம் இல்லை; இன்பமும் இராது. இவ்வுலகத்தின் நிலைமை இவ்வாறு உள்ளது.

பொருள்களைத்தான் பொதுவாகச் செல்வம் என்பது வழக்கம். இச் செல்வம் போல இன்ப வாழ்க்கைக்குக் கல்வி கேள்வி அருள் முதலியவெல்லாம் உயர்வகையில் இடஞ் செய்தலின், அவையும் செல்வங்கள் என்று பாராட்டப்படுகின்றன. கல்விச் செல்வம், செவிச் செல்வம், அருட் செல்வம் என்றெல்லாம் வழங்குதலை நாம் அறிவோம்.

ஆனால், மேலும் ஒரு செல்வம் வாழ்க்கையில் இன்பவூற்றாய் இலங்குதலையும் ஆசிரியர் திருவள்ளுவர் மிகவும் அருமையாய்ப் புலப்படுத்துகின்றார். ‘அடக்கம்’ என்னும் அரிய செல்வமே அது!

கல்வி கேள்வி பொருள் முதலிய எனைச் செல்வங்களெல்லாம் பெருமைப்படவேண்டுமானால், வீறு மிகுந்து பயன்படவேண்டுமானால், வாழ்க்கை நெறி தவறாமல் இருக்கவேண்டுமானால், உலகத்தில் எல்லார்க்கும் நலம் உண்டாகவேண்டுமானால், ‘அடக்கம்’ என்னும் இச் செல்வம் கட்டாயம் அமையவேண்டும்.

அடக்கம் மேல் நிலையாகிய அமரர் நிலையில் உய்த்து விளங்க வைத்துக், கல்வி முதலியவற்றின் பயனை நன்கு விளைத்து, அருளினும் நிறுத்தி உய்விக்கும். ஆகவே, அடக்கம் என்னும் அரிய செல்வம் செல்வத்தின்மேலும் ஒரு செல்வமாய், செல்வங்களையும் அழகு செய்யும் செல்வமாய்த் திகழ்வதாகும்.

மேலும், செல்வம் என்றால் பொதுவாகப் பொருட்செல்வத்தை உணர்த்துவதாலும், பொருட் செல்வமுடையோர் இவ்வுலகச் சிறப்பினராய்த் தலைமை வீறு வாய்ந்தவராய்க் காணப்படுதலாலும் அவர்களிடம் அடக்கம் என்னும் செல்வம் திகழ்வதுதான் மிகவும் மேம்பாடாய் விளங்கித் தெரியும்!

ஒன்றுமில்லாத வறியர்களிடம் அடக்கமிருப்பது அவ்வறுமையால் வந்த ஒழுக்கம்; அது சிறந்த அடக்கமாகாது. செல்வர்க்கே அடக்கம் செல்வமாதற்குரியது!

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்—அடக்கமாயிருத்தல் பொதுவாக எல்லார்க்கும் நன்றாகும்; அவருள்ளும்—அவ்வெல்லாருள்ளும், செல்வர்க்கே செல்வம் தகைத்து—செல்வமுடையார்க்கே அது மேலும் ஒரு செல்வமாந் தன்மைத்து.

நன்று—நல்லது; அடக்கம் நலந் தருவதாதலின், நன்றாகும் என்றார். பணிதல்—பண்புடன் பணிமுகங் கொள்ளுதல்; அதாவது அடங்குதல்; பணிமுகங் கொள்வார்க்கு அடக்கம் இயல்பாக உண்டாதலின், பணிதல் அடங்குதலாயிற்று.

அதற்கு மாறாக, செல்வம் குடிப்பிறப்பு கல்வி முதலியவற்றால் அடக்கமின்மையாகிய ஓர் எடுப்பு உண்டாதலும் கூடும். பலர்க்கும் பணிசெய்து வாழ்தலாகிய பொது நல வாழ்வு மேற் கொண்டால், வாழ்க்கை தகுதியில் அடங்கி நலமோங்கி மிளிரும்.

அவ்வடக்கத்தைக் குடிப்பிறப்பு கல்வி முதலியன செல்வத்தைப் பார்க்கினும் இயைபாய்ப் பயப்பிக்கும் பண்பினவாதலின், செல்வமுடையோர் அவற்றோடு அடக்கமுங் கொண்டிருத்தல் சிறப்புடையதாயிற்று.

பொருட்பாலில்-கல்வி:

நாடு நலம்பெற, பொருளாதார நெருக்கடிகள் தீர, ஊண் உடை உறையுள் தட்டு நீங்க விளைபொருள்களையும் செய் பொருள்களையும் பெருக்குங்கள் என்று நம் அரசியல் தலைவர்கள் அறை கூவுகிறார்கள். உண்மையில் இவைகள் சரிப்பட முதலில் கல்வி கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். பொருளைத் திரட்ட, திரட்டிய பொருளை நிரவல் செய்ய, அதனடிப்படையில் அரும்பும் பல்வேறு வகையான உயர்வு தாழ்வு நிலைகளை ஒழிக்க கல்வி வேண்டும். அதனால்தான் அவர் பொருட்பாலின் தொடக்கத்திலேயே கல்வியை வற்புறுத்தியிருக்கிறார்.

இன்பப்பாலில்-சலை:

பொருளில் உள்ள அழகை -கலையை- மனம் ஈடுபட்டு (இலயித்து) நுகரும் பகுதியை இன்பப்பாலில் தெரிவிக்கிறார் திருவள்ளுவர். வானம், கடல், மலை முதலிய இயற்கைகளை கோயில் கோபுரம் மண்டபம் சிற்பம் முதலிய செயற்கைகளை அமைதியாக நுகரும் நிலை எல்லாருக்கும் இருப்பதில்லையே. உடம்பை அழகாக வைத்துக் கொள்வது கூட ஒரு கலைதான். அப்படி எல்லோரும் வைத்துக் கொள்வதில்லையே. அழகைச் சுவைப்பவர்கள் கலைஞர்கள். அவர்கள் பொருள்களைக் கசக்கிச் சுவைக்க மாட்டார்கள். பண்டங்களை நுகர்வதற்கு மேற்பட்ட சுவை கலைச்சுவை. அது கருவி காரணங்களை விட்டு- உள்ளத்தால்- உயிர் உணர்வால் நுகரப்படுவது. ஆனால் பொருளுக்குக் கேடு இல்லை. சாத்திர நூல்களில் 'வித்தியா தத்துவ' நிலையில் அடங்கும். அழகு, ஒழுங்கு, திருத்தம், எழில் என்பன வெல்லாம் இந்நிலையிற் சேர்ந்ததே.

அறத்துப்பாலில் -அன்பும் அருளும்:

பொருளறிவு கல்வி-பொருளின் அழகறிவு கலை அக்கலையறிவிலும் மேற்பட்டது தவ அறிவு. பொருளை எண்ணிக் கீழ் நோக்கக் கூடிய கலையறிவை 'தியாக'த்தால் மேல் நோக்குமாறு செய்து அருளில் சேர்ப்பது தவ அறிவு. தவ உணர்வு வர முதலில் குடித்தனம் செய்து பழகவேண்டும் இல்லறம் தவத்துக்கு வித்து. இவ்வாழ்க்கையில் இருந்தால்தான் 'தியாக உணர்வு' இயல்பாக அரும்பும். பொருளைத் தேடு; அழகுபார்; நுகர்; அதோடு நிற்காதே அறம்செய்; கடமையாற்று என்கிறார் திருவள்ளுவர். அதனாலேயே இன்பப்பாலில் இல்வாழ்க்கையைக் கூறாமல் அறத்துப்பாலில் அதனைக் கூறியிருக்கிறார் அவர். திருமணம் கொள்வது அவர் கருத்துப்படி அறம் செய்யவே பக்குவம் தருவது, உயிர்ப்பண்பாகிய அன்புணர்வைப் பெருக்குவது இல்லறம். அதற்கு மேல் அருள் உணர்வு அது இரண்டு பாகம். தவம்-மெய்யுணர்வு.

வாழ்க்கையில் பாகுபாடு வேண்டும்:

வாழ்க்கையை ஒரே போக்கில் வைத்துச் சுவையற்றதாக்கி விடக்கூடாது. பொருள்தேட, அழகை நுகர, அறம்செய்ய, அருளில் திளைக்க என ஒவ்வொன்றிற்கும் நேரம் வகுத்துக் கொண்டு வாழ்வைப் பயன்மிக்கதாக்கிச் சுவைத்துக் கழிக்க வேண்டும். நம் முன்னோர்கள் காலை(முற்பகல்) நேரம் அறத்துக்கும் அதாவது நல்லவைகளைக் கேட்டல், கேட்பித்தல்-படித்தல், படிபித்தல்-ஏழை எளியோர் பிணியாளர்க்கு உதவுதல் முதலிய வற்றிற்கும், நண்பகலில் பொருள் முயற்சிகட்கும், மாலை (பிற்பகல்) இன்பத்துக்கும் அதாவது நல்ல காட்சிகள் இயற்கைச் சூழல்களில் திளைத்தல் முதலியவற்றிற்கும், இரவு அருளில் திளைத்தலுக்கும் (தேனித்தல்-தியானித்தல்) ஏற்றவை என்று கொண்டு அதற்கேற்ப தம் நிலைகளை வகுத்துக் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர்.

(வரும்)

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

53 கிடங்குத் தெரு, சென்னை 1

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)

வள்ளுவர் வழி

திருக்கோயில்களே களங்கள்:

இனி, அருளாகிய ஊன்று கொம்பைத் தாங்குமிடமாகக் கொண்டு அவற்றினூடு அமைந்த மேற்கூறிய வாழ்க்கைத் துறைகளாகிய படிகளையுடையது வாழ்க்கை ஏணி! ஆகவே, அருளை அடிப்படையாகக் கொண்டே பற்பல செயல்களில் மேல் நிலையை அடையவேண்டும். ஆகலின் நாங்கள் எங்கள் வாழ்க்கைப் பணியை, மன்பதைப் பணியை வள்ளுவர் வகுத்த பலதுறைப் பணியைத் திருவருள் முன்னிலையாகிய திருக் கோயில்களைக் களங்களாகக் கொண்டு செய்து வருகின்றோம்

அண்டபிண்ட நுட்பங்கள் அடங்கிய அமைப்பு:

ஒரு நூலை முழுதும் படித்தால்தான் அதன் ஒரு பகுதியை நன்றாக விளங்கிக்கொள்ள முடியும். அதுபோல, அண்ட பிண்டங்களின் அமைப்பு முறைகளைப் பொதுவாகவாவது ஒருவாறேனும் தெரிந்துகொண்டால்தான் அதனோடு தொடர்புடைய நம் வாழ்க்கையைப் பற்றி ஓரளவேனும் தெரிந்துகொண்டு முன்னேற முடியும். நம் வாழ்க்கை நம் உயிரோடும், உடம்போடு (பிண்டம்) மட்டும் தொடர்புடையதன்று, நாம் காணும் இவ்வுலகமும் வானமும் அதில் உருளும் எண்ணற்ற கோளங்களும் (அண்டம்) கூட நம் வாழ்வோடு தொடர்புற்றிருக்கின்றன. இதை இக்காலப் பொருளறிவுநூல் (விஞ்ஞானம்) அறிஞர்கள் கூடப் படிப்படியே தெளிந்து வருகிறார்கள். நம் முன்னோர்கள் இவ்வருட்கண்ணால் இவ்வண்ட பிண்டத் தொடர்பின் நுட்பங்களை நன்கறிந்திருக்கிறார்கள். அறிந்தவைகளை, அறிந்தபடி வாழ்க்கையிற் பயன் கொள்ளவே திருக்கோயில்களை அந்நுட்பத்தோடு அமைந்திருக்கிறார்கள். திருக்கோயில் அமைப்பு இவ்வண்ட பிண்ட நுட்பங்களை மொத்தமாகத் தெரிவிப்பது. (இதன் விவரங்களை ஆசிரியர் பேட்டைதோறும் சிறிது சிறிதாக விளக்கி வருவார்கள்)

நல்லவைகட்கெல்லாம் இடம்:

திருக்கோயில்களில் நல்லியக்கங்கள் எல்லாவற்றிக்கும் இடம் உண்டு உலகியலே கருதும் இயக்கங்களும் அங்கே இருந்து வேலை செய்யலாம் கல்வி, கலை, தொழில், தவம், அருள் எல்லாவற்றிற்கும் கோயிலில் இடமிருக்க வேண்டும்—இடம் தரவேண்டும்—முன்னே அப்படி இருந்தன. நீதி மன்றங்களும் மருத்துமனைகளும் கூட கோயில்களில் இருந்ததற்குச் சான்றுகள் இருக்கின்றன.

பொதுமக்கள் தொடர்பு வேண்டும்:

திருக் கோயில் சார்புகளில் இப்படி எல்லா நிலைகட்கும் இடம் இருப்பின் அவற்றிற்குப் பொதுமக்கள் வாழ்வோடு தொடர்பும், பொதுமக்களுக்கும் அவற்றால் நலமும் உண்டாகும். அதனால் எல்லாரிடத்தும் அருள் உணர்வு அரும்பிக் கொண்டே இருக்கும். கோயில்கள் வேண்டாம், விழாக்கள் வேண்டாம், சமயம் வேண்டாம், என்னும் கிளர்ச்சிகள் தோன்ற வழியே ஏற்பட்டிராது.

இயக்கக்காரர்கள் கடமை:

பொருளியக்கம், தொழிலாளர் இயக்கம் போன்ற வாழ்வியல் இயக்கக்காரர்கள் வள்ளுவர் வழியில் நின்று அருளடிப்படையில் தம் இயக்கங்களை மேற்கொண்டு திருக்கோயில்களில் இருந்தே அவற்றைச் செய்வது தப்பாகாது. இவைகட்கு இங்கே இடமில்லை என்று யாரும் சொல்லமுடியாது சொன்னால் உண்மைகளைக் காட்டிப் போரிடலாம். இவ்வகையில் திருக்கோயில்களையும் பொது மக்களையும் தொடர்புபடுத்த வேண்டியதும் இயக்கக்காரர்கள் கடமையே ஆகும்.

முதலில் வேண்டுவது:

திருவள்ளுவர் பொருளைப் பற்றியே நிரம்பப் பேசி இருக்கிறார். கலை பற்றிக் காமத்துப்பாலிலும், குடித்தனம், தவம், மெய்யுணர்வு பற்றி அறத்துப்பாலிலும் கூறுகிறார். பொருள் தேடத் திருவள்ளுவர் கூறும் முதல் வழி கல்வி. தெருவுக்கொரு பாடசாலை வேண்டும் என்கிறார் பாரதியார். இப்போது ஊருக்கொரு பள்ளி கூட இல்லையே!

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

இம்மை மறுமை இன்பத்தைத் தாரும்; என் பாபத்தை அகற்றும். உமக்கு நமஸ்காரம். (பிதாவாய் உள்ள மறு தம் மக்களுக்குத் துக்கத்தை அகற்றி, இன்பத்தைத் தருகிறார். உமது அருள் உள்ளவர் அதை அடைகிறார்.)

ஓ ருத்ர! என்னைச் சார்ந்த கிழவர்களும் குழந்தைகளும் யுவாக்களும் கருவும் என் பெற்றோரும் எனக்குப் பிரியமானவர்களும் என் உடலும் யாதொரு கஷ்டத்திற்கும் ஆளாகாமல் இருக்கட்டும்; என் சிசு புத்திரன் ஆயுள் பசு குதிரை வேலைக்காரர் முதலியவர்களிடம் உமக்குக் கோபம் வேண்டாம். அன்னத்தை அளித்து உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். (இந்த மந்த்ரம் பசுக்களுக்குண்டாகும் நோயை அகற்றும்.)

பசுவையும் புருஷனையும் சேவகனையும் கொன்றவரிடம் அவர்களைச் சிக்ஷிப்பதற்காகத் தோன்றும் உக்ரமான உமது ரூபம் தூரத்திலிருக்கட்டும். மங்களமான உருவம் எங்களிடம் இருக்கட்டும். எங்களைக் காப்பாற்று; இதர்களைவிட எங்களை உயர்ந்தவர் என்று தேவரும் கூறட்டும்; இஹலோக பரலோக ஸுகத்தைத் தாரும்.

நமது இதய கமலத்தில் யுவாவாகவும் யானையைக் கொல்லும் ஸிம்மம் போலப் ரளயகாலத்தில் மிக உக்ரமாய் இருப்பவனுமான ருத்ரனைத் தியானம் செய்வோம். நித்தியம் கொஞ்சமாக அழிந்துகொண்டிருக்கும் உடலுக்கு ஸுகத்தைத் தாரும். உம்மைத் துதிக்கிறோம். உமது உக்கிரமான ஸேனைகள் என் சத்துருவாகிய பாபத்தினிடம் செல்லட்டும். ருத்திரனது உக்கிரமான ஆயுதங்கள் நம்மைவிட்டுத் தூரச் செல்லட்டும்; பாவிகளிடம் அவருக்குண்டான கோபம் நம்மிடம் வாராமலிருக்கட்டும். அன்னத்தைக் கொடுப்பவரிடம், அவாது ஸ்திரமான கோபம் வாராதிருக்கட்டும். இஷ்டத்தை அளிக்கும் ஓ ருத்ர! என் புத்திரனுக்கும் அவன் புத்திரனுக்கும் சுகத்தை அளியும்.

எல்லோரையும்விட பக்தர் இஷ்டத்தையும் அதிகமாக வருஷிப்பவர் நீர். உமது உக்கிரமான ஆயுதங்களை உயரமான மரத்தில் வைத்துவிட்டு அலங்காரமான வில்லை மாத்திரம் எடுத்துக்கொண்டு யானைத் தோலையும் புலித் தோலையும் உடுத்து வந்து எங்களுக்கு ஸுகத்தைத் தாரும். ஆயிரக் கணக்கான உம் ஆயுதங்கள் சத்துருக்களிடம் செல்லட்டும். உமது கையிலுள்ள ஆயிரக் கணக்கான கூரிய ஆயுதங்களைத் தலைகீழாக வையும்.

அநுவாகம்-11

ஓ ருத்ர! உம்மைச் சார்ந்த விநாயக ருத்ரர், ப்ரமத ருத்திரர், சைவ ருத்திரர் முதலிய ஆயிரக்கணக்கான ருத்திரர்கள் பூமியில் ஸஞ்சாரம் செய்கிறார்கள். அவர்களிடம் ஆயிரக்கணக்கான தனுஸ்கள் இருக்கின்றன. அவைகளை ஆயிரம் யோஜனைக்கப்பாலிருக்கும்படி செய்யுங்கள். கடல் போன்ற ஆகாசத்திலுள்ள கணங்களும் பாதாளத்தில் ஸஞ்சரிப்பவர்களும் இந்திரலோகத்தில் உள்ளவர்களும் மரங்களில் ஸஞ்சரிப்பவர்களும் பிராணிகளிடத்தில் சிகை இல்லாமலும் ஜடைபோடும் ஸஞ்சரிப்பவர்களும் அன்னபானங்களிலிருந்து அவைகளை உண்பவர்களை ரோயாளிகளாகச் செய்பவர்களும் வைதிக லௌகிக வழிகளை ரக்ஷிப்பவர்களும் அன்னமளித்துப் போஷிப்பவர்களும் எங்கள் துக்கத்தை அகற்றுபவர்களும் கூரிய கத்தியையும் பாணத்தையும் கையில் ஏந்திக் காசி முதலிய தீர்த்தங்களை ரக்ஷிப்பவர்களும், இவர்களும் இவர்களைவிட இன்னும் அதிகமாகத் திக்குகள் எல்லாம் பாவி நிற்பவர்களுமான ஸகல ருத்ர கணங்களுடைய ஆயுதங்களையும் ஆயிரம் யோஜனைக்கப்பால் வைக்கும்படி செய்யும்.

பூமியில் அன்னத்தை ஆயுதமாகக் கொண்டவர்களுக்கும் தேவலோகத்தில் மழையை ஆயுதமாகக் கொண்டவர்களுக்கும் நஸ்காரம். கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் ஆகாசத்திலும் பத்து விரல்களையும் நீட்டி அஞ்ஜலி செய்து நமஸ்காரம் செய்கிறோம். நாங்கள் யாரைப் பகைக்கின்றோமோ எவர் எங்களைப் பகைக்கின்றார்களோ அவர்களை உக்கிரமான உங்கள் வாயில் தள்ளுகிறோம்.

முக்கண்ணனைச் சேவிக்கிறோம். வெள்ளரிப்பழம் காம்பிலிருந்து விடுபடுவதுபோல யமனிடமிருந்து விடுபட்டு அமிருதத்தை அடைகிறோம்.

ஓம் தத் ஸத்

ஸ்ரீருத்ரம் முற்றும்.

பிணியின்றி நற் குழந்தையை ஈன்றெடுப்பாள்.)

அநுவாகம்-7

பேரிகையின் சத்தமானவனே! துந்துபி அடிக்கும் கோலே; போரில் ஓடாதவனே! பகைவன் படையைப் பரிசிலனம் செய்பவனே! தூதனே! தூது செல்பவனே, கத்தியும் பாணப் பெட்டியும் தாங்கியவனே, கூரிய அம்புள்ளவனே, பல ஆயுதம் தாங்கியவனே! சூலமேந்தியவனே! பிநாகமெனும் வில்லுள்ளவனே. கொடி வழியிலும் ராஜ வீதியிலும் செல்பவனே, வாய்க்கால் ஜல வடிவனே, மலை அருவியே, சேறுள்ள நீராகவும் தெளிந்த ஓடை ஜலமாகவும் உள்ளவனே, ஆற்று நீராகவும் குட்டை நீராகவும் உள்ளவனே! கிணற்றின் நீரே குழியில் தங்கும் நீரே மழை நீரே கடல் நீரே. மேகமே மின்னலே சரத் காலமேகமே, வெயிலுடன் பெய்யும் மழையே காற்று மழையே ப்ரளய கால மழையே, பசு குதிரை முதலியவைகளின் கார்ய ரூபமானவனே, வாஸ்து பூமியை ரக்ஷிப்பவரே, உமக்கு , நமஸ்காரம்

அநுவாகம்-8

உமையுடன் கூடியவரும் துக்கத்தை அகற்றுபவரும் உதய கால ஸூர்யனின் மிகச் சிவந்த வர்ணமானவரும் கொஞ்சம் சிவந்தவரும் இன்பந் தருபவரும் பசுபதியும் பகைவருக்கு உக்ரமாகவும் பயங்கரமாகவும் இருப்பவரும் பகைவனை எதிரில் சென்றும் தூரச் சென்றும் கொல்பவரும் அநாயாஸமாகப் பகைவரைக் கொல்பவரும் உலகில் பகைவரை வெல்லும் ஒவ்வொரு வீரனுள்ளே இருப்பவரும், கல்பக விருக்ஷமானவரும் ஓங்காரப் பொருளும் இன்பமளித்து அனுபவிக்கும்படி செய்பவரும் வாழ்க்கை இன்பத்தையும் மோக்ஷ இன்பத்தையும் தருபவரும் கல்யாண ரூபமானவரும் மிகச் சிறந்த கல்யாண ரூபியும் ப்ரயாகம் முதலிய தீர்த்தத்திலும் தீர்த்தக் கரையிலுமிருந்து பக்தர்களை நிஷ்கல்மஷமாகச் செய்பவரும், பிறவிக் கடலுக்கும் அப்பாலும் கடுவிலும் இருப்பவரும் பாபக் கடலைக் கடத்திவைக்கும் தோணியும் பிறவிக் கடலைக் கடக்கும் தோணியும் பிறவிக்கடலைக்கடந்தும் ப்ராரப்த கர்மாவால் திரும்பியவருக்குத் துணையானவரும் ஜீவனைக் காப்பவரும் இளம் புற்களாயும் நுரையாயும் இருப்பவரும் மணலாகவும் பிரவாஹமாகவும் இருப்பவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

(இந்த அநுவாகமே பஞ்சாக்ஷரி அமையப்பெற்றது. வேதஸாரம் ருத்ரம்; ருத்ர ஸாரம் இது! கல்யாண ரூபியான உமக்கு நமஸ்காரம் என்பதே பஞ்சாக்ஷரியாம்.)

அனுவாகம்-9

களர் பூமியானவரே, பலரால் ஸேவிக்கப்பட்ட பெரும் மார்க்கமானவரே, சுக்காங்கல் பூமியே, வஸிக்க யோக்கியமான ஸ்தலமே, ஜடாதாரியே, பக்தர் முன் நிற்பவரே, பசு கொட்டகையிலிருப்பவரே, வீடுகளில் வஸிப்பவரே, கட்டிலில் படுப்பவரே, அரண்மனையில் வஸிப்பவரே, நுழைய முடியாத புதரில் இருப்பவரே! மலை குஹைகளில் தங்குபவரே! ஆழமான ஜலத்திலும் பனி நீரிலும் உள்ளவரே, பரமாணுவிலும் புழுதியிலும் இருப்பவரே, உலர்ந்ததிலும் ஈரத்திலும் உள்ளவரே, கடினமான புல்முளைக்காத இடத்திலும் இளம்புல் உண்டாகும் இடத்திலும் இருப்பவரே; பூமியிலும் நீரிலும் உள்ளவரே, இலையிலும் சாகிலும் இருப்பவரே, ஆயுதத்தைத் தயாராக வைத்திருப்பவரே, அடிப்பவரே, பகைவனுக்குக் கொஞ்சமாகவும் அதிகமாகவும் துன்பந் தருபவரே, பக்தர்களுக்கு உதாரணமாகச் செல்வத்தைத் தருபவர்களே தேவர்களுக்கு ஹிருதயமாக உள்ளவர்களே, அழிவே இல்லாதவர்களே, கோரிய பொருளைத் தேடி வந்து தருபவர்களே, அடியோடு பாபத்தைப் போக்குபவர்களே. எங்கும் கிளம்புபவர்களே, ருத்ரர்களே, உங்களுக்கு நமஸ்காரம்.

பிரார்த்தனைக்கு:

அநுவாகம்-10

பாவிகளுக்கு நரகத்தை அளிப்பவரே, அந்நத்தைத் தருபவரே, பிக்ஷாடன மூர்த்தியே, கழுத்தில் கறுப்பும் மற்றவிடங்களில் சிவப்புமான ரூபமுள்ளவரே, என்னைச் சார்ந்தவரைப் பயப்படுத்தாதீர், ஒருவரும் நோய்வாய்ப்பட வேண்டாம். இறக்க வேண்டாம். உமது சாந்தமான உடலால் எங்களைச் சுகப்படுத்தும். ஸகல ரோகத்தையும் அகற்றிப் பிறப்பிறப்பையும் அகற்றிச் சிவாநந்தம் தருவது உமது உருவம். பித்ருக்களை நாசம் செய்பவரான ஓ ருத்ர! உம்மைத் தியானம் செய்கிறோம். என்னைச் சார்ந்த புத்ர மித்ராதிகளும், பசு அஸ்வம் முதலியவைகளும் என் கிராமத்தைச் சார்ந்த அனைவரும் சுகமாக இருக்கும்படி செய்யும்.

வனே! சிவந்த வர்ணமுள்ள ப்ரபோ! மரங்களைக் காப்பவனே! மந்திரியே! வியாபாரித் தலைவனே! புதர்களைக் காப்பவனே! பூமியைப் படைத்தவனே! தனந் தருபவனே, ஓஷதிகளைக் காப்பவனே, போரில் உரக்க வீர வாதம் செய்பவரே! பகைவனைக் கதறவைப்பவனே! கால் படைத் தலைவ! சத்துரு படையைச் சூழ்ந்து கொள்பவனே! சத்ரு ஸேனையைத் தொடர்ந்து ஓடுபவனே! சரணம் அடைந்தோரைக் காப்பவனே! உமக்கு நமஸ்காரம்.

அநுவாகம்-3

பகைவரை அவமதிப்பவனே! நன்றாக சிக்ஷிப்பவனே, சூர சேனையைக் காப்பவனே, கொண்டை போன்றவனே, கத்தியேந்தியவனே, பதுங்கித் திருடுபவர் தலைவா, சாத்தையும் சரப் பெட்டியையும் தரித்தவனே, பகலில் திருடுபவனுக்குப் பதியே, தந்தை அபஹரித்து வஞ்சிப்பவனே, உடனிருந்து திருடுபவர் தலைவா, யஜமானன் வீட்டில் எப்பொழுது திருடலாம் எனப் பார்ப்பவனே, கடைத் தெருவில் திருடுபவனே, காட்டிலுள்ள திருடனே, கொலைக்காரத் திருடனே, பிராணிகளைக் கொல்பவனே, தான்யம் திருடுபவனே, கத்தி ஏந்திய திருடனே, இரவில் திரிந்து திருடுபவனே, கொலைக்காரத் திருடன் தலைவ! தலைப்பாகை அணிந்தவனே, மலையில் திரிபவனே, வீட்டையும் வயலையும் அபஹரிப்பவரின் தலைவ! அம்பு ஏந்தியவனே, வில்லேந்தியவனே, வில்லில் நாணேற்றி அம்பைத் தொடுப்பவனே, நாண் கயிற்றை இழுத்துச் சாத்தை விடுபவனே, குறிவரை பாணத்தைச் செலுத்திக் குறியை அடிப்பவனே, உட்கார்ந்திருப்பவனே, படுத்திருப்பவனே, தூங்குபவனே, விழித்திருப்பவனே, நிற்பவனே, ஓடுபவனே, ஸபையில் அமர்ந்தவனே, ஸபாபதியே, குதிரை வடிவ, குதிரைத் தலைவ, உமக்கு நமஸ்காரம்.

பல வகையான திருடராயும், வில்லாளியாயும் பல காரியங்களைச் செய்பவராயும் இருக்கும் உமக்கு நமஸ்காரம். (இஷுவை வைத்திருப்பவர் என்பது முதல் பன்மையில் கூறுகிறது)

அநுவாகம்-4

நாலு புறமும் பகைவனை அடிக்கத் தக்க பெண் உருவமானவரும், நன்றாக அடிக்கும் சக்தியானவரும் உயர்ந்த மாத்ருகா கணமாக இருப்பவரும் துர்க்கா ரூபமானவரும், விஷய ஆசை உள்ளவரும் அவர்களுக்குத் தலைவனும், பல ஜாதிக் கூட்டத் தலைவரும் தேவர்களது வேலைக்காரக் கணமாகவும் அவர் தலைவராக இருப்பவரும் விகாரமானவரும் விச்வரூபியும் மஹா புருஷனானவரும் அல்பமானவரும், தேரில் இருப்பவரும் தேரில்லாதவரும் தேராக இருப்பவரும் ரதபதியும், சேனையானவரும் சேனைத் தலைவரும் தேர் செய்பவரும் தேர் ஓட்டுபவரும் குயவனும், கருமானும், குறவனும், செம்படவனும், பாணம் செய்பவரும், தநுஸ் செய்பவரும் மிருகத்தைக் கொல்பவரும், நாயடிப்பவரும் நாயாயிருப்பவரும் பேய்த் தலைவருமான ருத்திரருக்கு நமஸ்காரம்.

அநுவாகம்-5

சிருஷ்டிப்பவரே, துக்கத்தை அகற்றுபவரே, பாபத்தைப் போக்குபவரே, பசுபதியே, நீலகண்டனே, வெளுப்பான கழுத்துள்ளவனே, ஜடை உள்ளவரே, துறவியே, இந்திர ரூபியே, நூற்றுக் கணக்கான வில் உள்ளவரே, கைலாஸத்தில் படுத்திருப்பவரே, விஷ்ணு ரூபியே, மழை பொழிபவரே, அம்பேந்தியவரே, சின்ன சரீரமுள்ளவரே, வாமனரே, பெரியவரே, ஸத்குணம் நிறைந்தவரே, வயதால் மூப்புள்ளவரே, குணத்தால் கிழவரே, எல்லாவற்றிற்கும் முன்னவரே, முதல்வரே, எங்கும் நிறைந்தவரே, செல்வத்தில் ஸமர்த்தரே, சீக்கிரமாகச் செல்பவரே, ஜல ப்ரவாஹ ரூபியே, அலையிலும் அலையில்லா நீரிலும் இருப்பவரே, பிரவாஹத்திலிருப்பவரே, தீயிலிருப்பவரே, உமக்கு நமஸ்காரம்.

அநுவாகம்-6

மிக வயதானவனும் யுவாவும் ஹிரண்யகர்ப்பனும் காலாக்நி ருத்திரனும் தேவாதி ரூபனும் கன்றும் கிளையும் புண்ய பாவம் உள்ளவனும் கல்யாணக் காப்பு அணிந்தவனும் யமனும் முக்தி பெற்றவனும், தான்யம் நிறைந்த பூமியானவனும், களம் என்ற இடமானவனும், வேதத்தாலும் வேதாந்தத்தாலும் அறியத்தக்கவனும் மரமாயும் கொடியாயும் உள்ளவனும், ஒலியாயும் பிரதித்வனியாக உள்ளவனும் விரைவில் செல்லும் ஸேனையும் தேரும் உள்ளவனும், சூரனும் பகைவனைக் கொல்பவனும், கவசமும் தங்க இடமும் உள்ளவனும், தலையிலும் உடலிலும் அங்கி அணிந்தவனும், ப்ரஸித்தமானவனும் ப்ரஸித்தமான ஸேனை உள்ளவனுமான ருத்ர, உமக்கு நமஸ்காரம். (கடைசி இரு மந்திரங்களை ஜபித்து கையில் ஸூத்திரத்தைக் கட்டினால் கர்ப்பிணி

அருள் துறை

ஸ்ரீ ருத்ரம்

அநுவாகம்-1

பூஜைக்கு:

பகைவரைக் கதறச் செய்யும் ஓ ருத்ர! உமது கோபத்திற்கு நமஸ்காரம். உமது பாணத்திற்கும் வில்லிற்கும் வில்லேந்திய பாஹுவுக்கும் நமஸ்காரம். மங்களமான உம் சரத்தாலும் வில்லாலும் பாணப் பெட்டியாலும் எங்களுக்கு இன்பத்தைத் தாரும்.

உலகிற்கு இன்பம் அளிக்கும் ப்ரபோ! உமது மங்களகரமான ரூபத்தால் எங்களை ஸுகப்படுத்தும். பாப ரூபமான பகைவர் மீது போடத் தயாராக வைத்திருக்கும் அம்பை எங்களிடம் சாந்தமாகச் செய்யும். என்னைச் சார்ந்த பிராணிகளையும் மனிதரையும் ஹிம்ஸிக்காதீர்.

கைலாஸபதே! உம்மை அடைய நல்ல ஸ்துதிகளைக் கூறுகிறோம். நாங்கள் அன்யோன்யம் அன்புடன் வாழும்படி செய்யும்.

பாம்பு புலி முதலிய விஷ ஜந்துக்களையும் துஷ்ட ராக்ஷஸர்களையும் நாசம் செய்யும் ருத்ர! நீர் தேவர்களில் முக்கியமானவர்; முதலாவதான தேவ வைத்யர் எங்களையும் சிறப்புள்ளவர்களாகச் செய்யும். (விஷ ஹர மந்த்ர மிது)

நீர் ஸூர்யனாகஇருந்து பற்பல வர்ணங்களுடன் எண்ணிறந்த கிரணங்களுடன் விளங்குகிறீர். உம்மைத் துதிப்பவர் ருத்ர கோபத்திற்கும் பாபத்திற்கும் ஆளாகமாட்டார்.

காளகூடத்தை அருந்திக் கறுத்த கழுத்துடன் பிரகாசிக்கும் உம்மை இடையர்களும் நீர் கொண்டுவருபவரும் மற்றப் பிராணிகளும் ஸூர்ய மண்டலமாகப் பார்க்கின்றனர். கற்றோரே கைலாஸ வாஸி என உம்மை அறிவர்.

க்ஷேமத்தை உண்டுபண்ணும் நீலகண்ட! இந்த்ரனாகவும் விளங்கும் உமக்கு நமஸ்காரம். உம்மைச் சார்ந்த அனைவர்க்கும் நமஸ்காரம். செல்வந் தரும் ஸ்ரீமானே! உமது வில்லைத் தளர்த்தி அம்புகளையும் உள்ளே வையும்.

பல்லாயிரம் கண் வாய்ந்த பகவானே! வில்லையும் அம்பையும் கீழே வைத்து எங்களுக்கு அருள் புரியும் ஓ ஜடாதாரியே! பாணப் பெட்டியில் சரங்களை வைத்துவிடும். வரந் தரும் கல்பகமே! உக்கிரமான ஆயுதங்களைக் கொண்டு எங்களை ரக்ஷியும்.

ஓ ருத்ர! சாந்தமாய் வைக்கப்பட்ட உமது ஆயுதத்திற்கு நமஸ்காரம்; உமது உக்கிரமான ஆயுதங்களும் பாணப் பெட்டியும் தூரே சென்று இருக்கட்டும்.

[பிரளய காலத்திலும், பிருமா காமனைக் கொண்டு தன் பெண்ணிடம் ஓடியபோதும், பாசுபதம் பார்த்திபனுக்கு அளிக்கும்போதும், மிக க்ரூரமான அரக்கருடன் போர் புரியும் போதும் கூரிய ஆயுதங்களைக் கொண்டார். அதுகாலை அவரது சினமும் பயங்கரமானது. ஆதலால் ஆயுதங்களை நமது பாபமெனும் பகைவனிடம் செலுத்தி நம்மிடம் சாந்தமாக இருந்து இன்பம் ஊட்டும்படி இந்த மந்திரங்கள் வேண்டுகின்றன. சாந்த மூர்த்தியாக இருக்கும்போதுதான் அருள் சுரக்கும்.]

[திருசதி அர்ச்சனையாக அமைந்த எட்டு அநுவாகங்களின் பொருள்: உமக்கு நமஸ்காரம் என்று ஒவ்வொரு நாமாவிலும் வருவதால் நாமாக்களின் பொருளை மாத்திரம் எழுதுகிறோம். நம: என்பதை நேயர் மனதில் கொண்டு படிப்பார்களாக.]

அர்ச்சனைக்கு:

அநுவாகம்-2

பொன்னணி பூண்ட ஸேநாபதே! திக்பாலகனே! பசுமை வாய்ந்த மரமானவனே! பசுபதே! ஸ்வர்ண வர்ணமான இளம் புல்லானவனே! அர்ச்சிராதி மார்க்கத் தலைவா! விருஷபாரூட! சத்துருவைக் கொல்பவனே! அன்னமளிப்பவனே, கறுத்த கேசமுள்ளவனே! பூணூல் அணிந்தவனே! நற்குண முன்னோர் தலைவ! பிறவியை அறுக்கும் கோடாலியே! ஜகத்பதே! வில்லால் காக்கும் ருத்ர! க்ஷேத்ர பாலக! தேரோட்டுபவனே! கொல்ல முடியாதவனே! வனங்களைக் காப்ப

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

ஆயுள் —

கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு

கிளை 7	செய, ஐப்பசி, 5-11-54 வெள்ளி.	தளிர் 5

பள்ளிகளில் சமய போதனை

இந்திய அரசாங்கம் சமயச் சார்பற்றது எனக் கிளக்கப் பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் வடநாட்டில் இருந்த 'இந்து முஸ்லீம்' கலவரங்களே.

இக்கலவரங்கள் எல்லாமே சமய அடிப்படையில் எழுந்தவை என்று சொல்ல முடியாது. பெரும்பாலன அரசியல் பொருளியல் அடிப்படைகளில் எழுந்தவையே.

'பாகிஸ்தான்' பிரிந்த பின் 'இந்து முஸ்லீம்' கலவரங்களுக்கு இந்தியாவில் அடிப்படையும் இல்லை. அவைகள் அவ்வளவாக இல்லவும் இல்லை.

நிற்க, மக்கள் ஒழுக்கமாக, அமைதியாக வாழச் சமய உணர்ச்சி கட்டாயம் வேண்டும். ஒழுக்கத்தை வற்புறுத்தாத சமயமே இல்லை. ஒழுக்கமாக நடக்க வேண்டும் என்பதற்குச் சமய நம்பிக்கை இல்லாதவர்களிடம் அடிப்படை. ஏதுமே இல்லை. அவரவர்களாகப் பொறுப்புணர்ந்து ஒழுங்காக நடந்தால்தான் உண்டு. எல்லா நிலையிலும் மனிதன் அப்படி நடப்பான் என்று சொல்ல முடியாது....நடப்பதானல் அரசாங்கமும், சட்டங்களும் தண்டனைகளும் இருக்கவேண்டிய கட்டாயமே இல்லை.

இனி, அரசாங்கம் சட்டத்தின் வழி மக்களிடம் ஒழுக்கம் நிலைக்க வழி செய்கின்றது. ஆனால் மக்களைச் சட்டத்தின் வழியாகவே சரிப்படுத்திவிட முடியாது என்பதையும் எவரும் மறுப்பதற்கில்லை. அவரவர்கள் மனச் சான்றினைக் கொண்டே அவரவர்கள் செய்யும் தீய செயல்களுக்குத் தண்டனை கொடுத்து நல்லவழியில் செலுத்த முயல்வது சமயம். உண்மையிலேயே சமய நம்பிக்கையுடைவர்கள் தவறு செய்ய ஒருப்படமாட்டார்கள். செய்துவிட்டாலும் அதற்காகத்தாமே வருந்தித் திருந்தி மன்னிப்பும் வேண்டுவர்.

ஆகவே போலிச் சமய வாதிகளையும் வெளிப் பகட்டு அகப் புரட்டுகளையும் கண்டு சமயமே கூடாது என்று சொல்லிவிடக் கூடாது. அரசியல் கட்சிகள் பலவும் பல்வேறு 'தில்லு முல்லு'களைச் செய்கின்றன. பித்தலாட்டம் இன்றைய சில அரசியலில் அரசியல் தந்திரமாகவே கொள்ளப்படுகிறது. இவற்றிற்காகவெல்லாம் அரசியலே வேண்டாம் கட்சிகளே வேண்டாம் என்று முடிவு செய்துவிடலாமா?

சமயப்போரால் கிளப்பி விடப் பட்ட அரசியல், பொருளியல் போராட்டங்களைக் கண்டு இந்திய அரசாங்கத்தைச் 'சமயச் சார்பற்றது' என்று குறிப்பதை விடச் 'சமயப் பொதுவானது' என்று குறிப்பது நல்லது. அரசாங்கமே, அமைச்சர்களும் அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் சமயச் சார்பான நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுவதைச் சமயச் சார்பற்ற அரசாங்க முதல்கள் செய்யும் செயல் என்று கிண்டல் செய்யும் எதிர்க் கட்சிகள்கூட அப்போது எதும் சொல்ல வழியில்லை.

மக்கள் ஒழுக்கத்தைக் காக்கச் சட்டத்தோடு சமய உணர்ச்சியும் வேண்டியிருத்தலின் மேலே கூறியபடி இந்திய அரசாங்கத்தைச் 'சமயப் பொது' என்று கிளந்து, பள்ளிகளிலும் சமயக் காழ்ப்பின்றி அவரவர்கள் தத்தம் சமய நூல்களை அறிவியல் முறையிற் படிக்க வசதி செய்து தருவதுதான் நல்லது. சமயச் சார்பற்ற அரசாங்கம் என்றதும், சமயமே வேண்டாம் என்கிற நாத்திக அரசாங்கம் என்று பலர் கருதி வெறுக்கவும் அச்சப் படவும் நேர்கிற நிலையும் இம் முறையால் இல்லாமற்போகும்.

இவ்வகையில் எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது இந்தியாவின் எதிர்காலத் தலைவர்களாக வரக்கூடிய இளைஞர்கள் தம் பள்ளி வயதிலேயே ஒழுக்கமும், பொறுப்புணர்ச்சியும் பெற்றுச் சிறக்கப் பள்ளிகளில் சமய போதனை செய்ய ஏற்பாடு செய்வது பலவகையிலும் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் நல்லது என்பது தெளிவாம்.

—ஒளியகம்.